**MCOP NO:1077/2023 மற்றும் 1078/2023 (Joint Trial) DATE: 26.03.2026**

எ.ம.சா : 1

பெயர் : திரு. யோகேஷ்

த/பெ : திரு.தங்கவேலன்

வயது : 26

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் திருக்கழுக்குன்றம் வட்டார போக்குவரத்து அலுவலத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதத்தை சாதசாஆ 1 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை சாதசாஆ 2 ஆகவும் தாக்கல் செய்கிறேன். சாதசாஆ 2 ல் காட்டப்பட்டுள்ள அர்ஜுன் என்பவர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் அவரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், மேலும் அவருக்கு CR Notice வழங்கப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாதசாஆ 2 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் பக்கம் 2 ல் வரிசை 21 ல் அசல் ஓட்டுநர் உரிமத்தை மோட்டார் வாகன தணிக்கையின் போது தாக்கல் செய்யவில்லை என்று காட்டப்பட்டுள்ளது என்பதால் அவர் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளாரா இல்லையா என்ற விவரம் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். மேற்படி நபரானவர் வேறு வட்டார போக்குவரத்து அலுவலத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளாரா இல்லையா என்ற விவரத்தையும் என்னால் சொல்ல முடியாது.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.